# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 12

| | | | |
|---|---|---|---|
| Name | : மகாலட்சுமி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.கருத்தபாண்டியன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th day of November 2024.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் சென்னை, தடய அறிவியல் துறையின் இயக்குநராக இருந்து 31.01.2024 அன்று பணி ஓய்வு பெற்றேன். கடந்த் 05.01.2018 அன்று தடய அறிவியல் துறையின் DNA பிரிவில் துணை இயக்குநராக இருந்தபொழுது பொள்ளாச்சி, நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் இருந்து கடித எண்.15/2018, நாள் 04.01.2018 அன்று பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.7/2014 வழக்கில் சம்மந்தப்பட்ட காகித உறை ஒன்று ஆய்வகத்தில் பெறப்பட்டது.

2. அந்த காகித உறையில் செல்வன், பிருந்தா மற்றும் பிருந்தாவின் பெண் குழந்தை அனுசியா ஆகியோருடைய மாதிரி ரத்தம் அடங்கிய ரத்த அட்டைகள் இருந்தன. மேற்கண்ட ரத்தத்தை DNA ஆய்விற்கு உட்படுத்தி குழந்தை அனுசியாவின் தந்தை யார் என்பதை அறியும் பொருட்டு DNA பகுப்பாய்விற்கு ரத்த மாதிரிகள் உட்படுத்தப்பட்டது.

3. ரத்த மாதிரியில் இருந்து DNA பிரித்தெடுக்கப்பட்டு PCR amplified STR செய்முறை மூலம் 14 STR குறியிடங்களில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. பொதுவாக ஒரு குழந்தைக்கு ஒரு STR குறியிடத்தில் காணப்படும் இரண்டு அல்லீல்களில் ஒன்று உயிரியல் தாயிடம் இருந்து பெறப்படும். மற்றொன்று உயிரியல் தந்தையிடம் இருந்து பெறப்படும். அதன்படி குழந்தை அனுசியாவிடம் உள்ள 14 STR குறியிடங்களில் காணப்படும் இரண்டு அல்லீல்களில் ஒன்று உயிரியல் தாய்

பிருந்தாவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. உயிரியல் தந்தையிடம் இருந்த பெறவேண்டிய மற்றொரு அல்லீல் 14 STR குறியிடங்களிலும் திரு. செல்வத்திடம் காணப்படுவதால் அவர்தான் உயிரியல் தந்தை என தீர்மானித்து அதற்குரிய சாத்தியக்கூறு கணக்கிடப்பட்டது. அது 99.9999999 %ஆகும் திரு.செல்வம் தவிர வேறு எந்த நபரும் குழந்தைக்கு தந்தை இல்லை என தீர்மானித்து அதற்குரிய சாத்தியக்கூறு கணக்கிடப்பட்டது. அது 99.999999999999% ஆகும். முடிவு : நாங்கள் மேற்கொண்ட DNA ஆய்வில் இருந்து பெண் குழந்தை அனுசியாவின் உயிரியல் தந்தை செல்வம்தான் என்று முடிவு செய்யப்பட்டு எங்களது ஆய்வறிக்கை DNA/PAT/3/2018. நாள் 28.03.2018 என இலக்கமிடப்பட்டு 03.04.2018 அன்று பதிவு தபால் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி ஆய்வறிக்கை **அசாஆ 7** ஆகும். மேற்படி ஆய்வின்போது நான் உடனிருந்தேன். போலீசார் டாக்டர் திலகம் என்பவரை இது குறித்து விசாரித்துள்ளனர். ஆய்வின்போது நான் உடனிருந்ததால் அதன் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியமளிக்க சம்மன் கிடைக்கப்பெற்றது. FTA கார்டுகளை நீதிமன்றத்தில் இருந்து பெண் காலவர் 999 இந்துமதி என்பவர் ஆய்வகத்தில் கொடுத்துள்ளார். FTA கார்டுகளை நேரடியாக நானே பெற்றேன். அசாஆ 7ல் நான்தான் FTA கார்டுகளை நேரடியாக பெற்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆய்வகத்தில் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2. FTA கார்டுகளை இரத்த மாதிரிகளை சேகரம் செய்வதற்கு கொடுப்பது தடய அறிவியல் ஆய்வகத்தின் துணை இயக்குநர் மட்டுமே கொடுக்க இயலும். அதிகாரம் பெற்ற அமைப்புகளின் வேண்டுகோள்படிதான் அவ்வாறு கொடுக்க இயலும் என்றால் சரிதான். FTA கார்டுகள் பெண் காவலர் 638 திருமதி.சுமதி கையில் ஒப்படைக்கப்பட்டது. அதற்குரிய ஒப்புகையும் பெறப்பட்டது.

3. 10.11.2017 அன்று இந்த நீதிமன்றத்திற்கு நான் கடிதம் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடிதம் 06.11.2017 தேதியிட்ட பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் கடிதத்திற்கு பதில் கடிதம் என்றால் சரியல்ல, போலீசாரால் இந்நீதிமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட கடிதத்திற்கு நீதிமன்றத்தில் எங்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் கடிதம் அனுப்பியுள்ளேன். மேற்படி பதில் கடிதத்தில் சம்மந்தப்பட்ட நபர்கள் ஆய்வகத்திற்கு நேரில் வரவேண்டியது

இல்லை என்றும் அருகில் உள்ள மருத்துவமனையில் இரத்த மாதிரிகளை சேகரம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வகத்திற்கு சம்மந்தப்பட்ட நபர்கள் நேரில் வந்திருந்தால் இரத்த மாதிரிகளை பொள்ளாச்சியில் இருந்து சென்னைக்கு கொண்டு வரும் வழியில் மாற்றி வைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன என்றால் சரியல்ல.

4. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் புகார்தாரரின் பெயர், அவரது குழந்தையின் பெயர் மற்றும் எதிரியின் பெயர் மற்றும் வழக்கின் வரலாறு ஆகியவற்றை குறிப்பிட்டுதான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எல்லா வழக்குகளிலும் அவ்வாறுதான் கடிதம் அனுப்பப்படும். 05.01.2018 அன்று இரத்த மாதிகள் சேகரம் செய்யப்பட்ட அட்டைகள் ஆய்வகத்தில் கிடைக்கப்பெற்றன.

5. இரத்த மாதிரிகள் கிடைக்கப்பெற்ற நாளில் இருந்து எத்தனை நாளில் ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டுமென்றால் அதற்கு குறிப்பிட்ட நாட்கள் எதுவும் கிடையாது. எங்கள் ஆய்வகத்தில் அதுவரை கிடைக்கப்பெற்ற வழக்குகளை வரிசை எண்ணை பொறுத்து ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். அவ்வாறு காலக்கெடு இல்லை என்று தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நீதிமனற்த்தில் இருந்து இவ்வழக்கில் 11.04.2018 தேதியிட்ட நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டால் அதற்கு முக்கியத்துவம் அளிப்போம். எனது பதில் கடிதத்தில் 03.04.2018 தேதியன்றே ஆய்வறிக்கை அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எங்கள் ஆய்வகத்தில் இருந்து அனுப்பப்டும் இத்தகைய கடிதங்கள் பதிவு தபால் மூலம் அஞ்சல் ஒப்புகையுடன்தான் அனுப்பப்படும்.

6. STR profile ஒவ்வொரு தனி நபருக்கும் மாறுபடும் என்றால் சரிதான். STR Locus இரட்டையர்களுக்கு(identical twins)க்கு ஒரே மாதிரியாக இருக்கும். STR profile மற்றும் STR Locus என்பவது வேறு வேறானவை ஆகும். நிறைய STR Locus சேர்ந்ததே STR profile ஆகும். STR Locus என்பது இலட்சக்கணக்கில் இருக்கும். STR Locus அனைத்து மனிதர்களுக்கும் ஒரே மாதிரியாகதான் இருக்கும். ஆனால் ஒரேஒரு STR Locus ல் உள்ள அல்லீல்கள் என்பது ஒவ்வொரு நபருக்கும் மாறுபடலாம் அல்லது மாறுபடாமலும் இருக்கலாம்.இது அறிவியலின்படி மெய்படுத்தப்பட்ட சங்கதி ஆகும்.

7. அசாஆ 7 ல் cumulative probabilities என்று குறிக்கப்பட்டதற்கு விளக்கம் என்ன என்றால் சர்வதேச வழிகாட்டுதலின்படி ஒரு ஆய்வறிக்கை 100% என்று கொடுக்கக்கூடாது. 99.999% என்று கொடுத்தாலே அது 100 %ற்கு ஒப்பாகும். அவ்வாறு கூற இயலாது என்றால் சரியல்ல. சர்வதேச வழிகாட்டுதல் அவ்வாறுதான் உள்ளது. மேற்படி அறிக்கையில் cumulative probabilities of paternity என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆய்வை நானும் டாக்டர் திலகா என்பவரும் சேர்ந்து செய்தேன். தற்சமயம் டாக்டர் திலகா என்பவர் பணியில்தான் உள்ளார் என்றால் சரிதான். டாக்டர் திலகா என்பவர் தற்போது உடல் நலம் சரியில்லாமல் இருப்பதால் அவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை. 31.01.2024 அன்று நான் பணி ஓய்வு பெற்றேன். மேற்படி டாக்டர் திலகா அவர்களை காவல் ஆய்வாளர் விசாரித்தபோது நானும் உடனிருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனது ஆய்வறிக்கையில் உள்ள சங்கதிகளுக்கும் நான் நீதிமன்றத்தில் கொடுத்துள்ள சாட்சியத்திற்கும் டாக்டர் திலகா அவர்கள் போலீசாரிடம் கொடுத்துள்ள வாக்குமூலத்திலும் மாறுபாடுகள் காணப்படுகின்றன என்றால் சரியல்ல. ஒரு குழந்தையின் DNA ல் STR Locus ல் உள்ள அல்லீல்களில் ஒன்று தந்தையுடையதாக இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு 14 STR Locus ல் உள்ள அல்லீல்களில் தந்தையுடையது இருக்கும் என்றால் சரிதான். குழந்தையின் STR படிவத்தில் உள்ள அல்லீல்கள் ascending order ல் அடுக்கப்பட்டுள்ளதால் இடதுபுறமோ வலதுபுறமோ தாய் அல்லது தந்தையின் அல்லீல்கள் இருக்கலாம்.

<u>மறு விசாரணை</u>: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

S/d M.A. Suvedharanyan
Judicial Magistrate No.I,
Pollachi.